பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

20 01 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>-

1. அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
2. நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்கான ஒளிவிளக்காக அரசியல் அமைப்பு திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.
3. தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் வேட்புமனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாளாகும்.
4. எச் எம் பி வைரஸ் பாதிப்பு குறித்து மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என்று தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.
5. ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்கால் அணி – சூர்மா அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று அமைப்பு சாரா தொழிலாளர்களை முறைப்படுத்துதல் மற்றும் அவர்களுக்கான சமூக பாதுகாப்பு உறுதிபடுத்துதல் தொடர்பான இரண்டு நாள் சர்வதேச கருத்தரங்கை அவர் இன்று தொடங்கி வைத்து பேசினார்.

அமைப்புசாரா தொழிலாளர்களின் அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்படும்போது அவர்கள் எளிமையாக வாழ்வது உறுதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அத்தொழிலாளர்கள் யாரையும் சாராமல் தன்னிச்சையாக செயல்பட முடியும் என்றும் அவர் கூறினார்.

சுயவேலைவாய்பபில் ஈடுபடுபவர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்யப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த கருத்தரங்களில் 16 நாடுகளைச் சேர்ந்த அமைப்பு சாரா தொழிலாளர் கொள்கை வகுப்பாளர்கள், சமூக பாதுகாப்பு நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் ஆசிய பசிபிக் பிராந்திய நாடுகளைச் சேர்ந்த வல்லுநர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

[]<<<>>>[]

நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்கான ஒளிவிளக்காக அரசியல் அமைப்பு திகழ்கிறது என்று மத்திய தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75-வது ஆண்டு கொண்டாட்டத்தையொட்டி புதுதில்லியில் தேசிய தபால் தலை அருங்காட்சியகத்தில் அஞ்சல்துறை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் அவர் இன்று பங்கேற்று பேசினார்.

இந்திய அஞ்சல்துறை, தபால்தலை மற்றும் அரசியமைப்பு குறித்த விழிப்புணர்வை மாணவர்கள் பெறுவதற்கான வழிகாட்டுதல்களை இந்த அருங்காட்சியகம் வழங்குவதாக அவர் பாராட்டு தெரிவித்தார்.

நாட்டு மக்களிடையே ஒற்றுமையை வலியுறுத்தும் வகையிலும், அரசியல் அமைப்பின் சிறப்பை எடுத்துரைக்கும் வகையிலும் மூன்று நாட்கள் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

[]<<<>>>[]

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் வேட்புமனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாளாகும்.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் ஐந்தாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இன்று மாலை வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டு அவர்களுக்கான சின்னங்களும் ஒதுக்கப்படும் என தெரிகிறது.

தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி மற்றும் உத்திரபிரதேச மாநிலம் மில்கிப்பூர் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல்களுக்கான வேட்புமனுக்களும் திரும்பப் பெறுவதற்கு இன்று கடைசி நாளாகும்.

[]<<<>>>[]

இனி கும்பமேளா குறித்த செய்திகள்...

*(சவுண்ட் பைட் - **song** – 8 நொடிகள்)*

பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாயையொட்டி பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

நாள்தோறும் மக்கள் கூட்டம் அதிகரித்து வருவதால் கும்பமேளா நடைபெறும் பகுதிகளில் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

கும்பமேளாவில் பங்கேற்கும் மக்கள் தரமான மற்றும் பாதுகாப்பான உணவுப் பொருட்களை பெறும் வகையில் பத்து நடமாடும் உணவு பரிசோதனை ஆய்வகங்களை மத்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் ஏற்படுத்தியுள்ளது.

உணவில் கலப்படம், கெட்டுப்போன உணவுகளை கண்டறிதல் உள்ளிட்ட சோதனைகளை இந்த ஆய்வகங்கள் மேற்கொள்ளும்.

கும்பமேளா நடைபெறும் பகுதிகள் ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, உணவு பாதுகாப்பு அதிகாரிகள் அங்குள்ள உணவகங்களில் பரிசோதனைகளை மேற்கொள்வார்கள் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே கும்பமேளா நடைபெறும் பகுதியில் கூட்டத்தை கட்டுப்படுத்துவது, தகவல் தொடர்பை மேம்படுத்துவது தொடர்பான பணிகளை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று உத்திரபிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

குடியரசு தின விழா, தை அமாவாசை, வசந்த பஞ்சமி உள்ளிட்ட விழாக்கள் தொடர்ச்சியாக வருவதன் காரணமாக மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படும் என்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் பலப்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

*(சவுண்ட் பைட் - **song** – 8 நொடிகள்)*

**[]<<<>>>[]**

எச் எம் பி வைரஸ் பாதிப்பு குறித்து மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என்று தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வைரஸ் பாதிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாக கூறினார்.

*( சவுண்ட்பைட் - மா சு ) --36-- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நாகை மாவட்டத்தில் பருவம் தவறி பெய்த மழை காரணமாக நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அறுவடைக்கு தயாராக இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - செ ஜெ ) -41--- செகண்ட்*

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் அமைச்சரவைக் கூட்டம் முதலமைச்சர் திரு ஓமர் அப்துல்லா தலைமையில் இன்று நடைபெறுகிறது.

ஜம்மு தலைமைச் செயலகத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் நிதி, சுகாதாரம், கல்வித்துறை தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.,

ஜீலம் - பங்பங்கா நதிநீர் பாதுகாப்புத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் வாவாதிக்கப்படும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் மெந்தார் பகுதியில் உள்ள கிராம பாதுகாப்புப் படையினருக்கு துப்பாக்கிசூடு மற்றும் தாக்குதல் சம்பவங்களில் தங்களை தற்காத்துக் கொள்வதற்கான பயிற்சியை ராணுவம் வழங்கியுள்ளது,

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் நடைபெற்ற இந்த பயிற்சியில் கிராம பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 43 பேர் பங்கேற்றதாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த பயிற்சியின்போது தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்தும் விவரிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

இந்தியா -இலங்கை இடையேயான மின்சார துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் சம்ப்பூர் சூரிய மின்சக்தி திட்டம் இறுதி செய்யப்பட்டிருப்பதாக இலங்கை அதிபர் திரு அனுரா குமார திசநாயகா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் இதனைத் தெரிவித்த அவர், மின்சாரம் யூனிட் ஒன்றுக்கு ஐந்து புள்ளி ஒன்பது ஏழு அமெரிக்க சென்கள் என்ற விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

தேசிய அனல் மின் கழகம் மற்றும் சிலோன் மின் வாரியம் கூட்டாக செயல்படுத்தும் இத்திட்டத்தின் மூலம் மின்துறையில் இலங்கை மேலுமை வளர்ச்சியடைய வழிவகுக்கும் என்று அவர் கூறினார்.

[]<<<>>>[]

காஸா பகுதிக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்கும் வகையில் சுமார் 200 டன் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய தொகுப்பை ஐக்கிய அரபு எமிரேட் அனுப்பி வைத்துள்ளது.

அந்நாட்டு அதிபர் திரு ஷேக் முகமது பின் சையத் அல் நஹியான் உத்தரவின் பேரில் இந்த நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த தொகுப்பில் உணவுப் பொருட்கள், குளிர்கால ஆடைகள், அத்தியாவசிய மருந்து பொருட்கள் இடம்பெற்றுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்கால் அணி – சூர்மா அணியை எதிர்கொள்கிறது.

ராஞ்சியில் இப்போட்டி இரவு மணி 8-15-க்கு தொடங்குகிறது.

மகளிர் பிரிவில் சூர்மா அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை ஆறு மணிக்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் டாடா ஸ்டீல் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் குகேஷ் - அமெரிக்காவின் **Fabiano caruana** -வை எதிர்கொள்கிறார்.

மற்ற இரண்டு ஆட்டங்களில் அர்ஜூன் எரிகேசி – பிரக்ஞானந்தாவை-யும், லியோன் லூக் - ஹரிகிருஷ்ணாவையும் எதிர்கொள்கின்றனர்.